DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**CC.No. 190 /2014 P.W. 1 / LW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மணிகண்டன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. சிவசாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.09.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது தஞ்சாவூர் காவேரி நகரில் குடியிருந்து ஆட்டோ டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்கு தெரியும். மன்னார்குடியில் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மெஸ் நடத்தி வருகிறார்கள். அவர்களிடம் எனது மனைவி வேம்பு ரூ. 1 லட்சம் வரை சீட்டுப்பணம் வசந்தாவிடம் கட்டி வந்தார். நாங்கள் கட்டிய தொகையை திரும்ப தரவேண்டி வசந்தாவிடம் கேட்டேன். அதற்கு அவர் தள்ளிபணம் எடுத்துக்கொள்ளலாம் என்று காலம் தாழ்த்தி வந்தார்.

2) அதன்பிறகு நாங்கள் கட்டிய தொகையை திரும்ப தர கேட்டதற்கு ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் மறுத்தார்கள். அதன்பிறகு இரண்டு நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டிய மன்னார்குடி நகர காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் , திருவாரூர் அவர்களிடம் நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் சொன்னோம். அதன்பிறகு மன்னார்குடி நகர போலீசார் விசாரித்தார்கள்.

3) அப்போது வசந்தா மூன்று தவனைகளாக ரூ.1 லட்சத்தை தருவதாக சொன்னார். அப்போது அவரது மகன் இருந்தார். மீண்டும் காவல்கண்காணிப்பாளர் , திருவாரூர் அவர்களிடம் சென்றோம். அங்கிருந்து மன்னார்குடி நகர காவல்நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பிறகு நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று மன்னார்குடி நகர காவல் ஆய்வாளர் அறிவுறுத்தினார்.

4) என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் 26.12. 2012 ஆம்தேதியிட்ட உறுதி மொழி பத்திரம் எனக்கு ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் கையொப்பமிட்டு கொடுத்தார்கள். அந்த உறுதிமொழி பத்திரம் **அசாஆ. 2 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.( மேற்படி அசாஆ. 2 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. )** நாளது தேதிவரையில் எங்களுக்கு சேரவேண்டிய ரூ.99 ஆயிரம் மட்டும் நாளது தேதி வரையில் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கொடுக்கவில்லை. நான் அவ்வாறு கட்டிய சீட்டுப்பணத்தை எதிரிகள் கொடுக்காததால் மிகவும் பாதிப்படைந்துள்ளோம். இது சம்பந்தமாக நான் கொடுத்த புகாரில் போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரத்தை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6ம்வகுப்புவரை படித்துள்ளேன். அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணமானது எங்கு தட்டச்சு செய்யப்பட்டதுஎ ன்றால் தஞ்சாவூரில் கோர்ட் ரோட்டில் தட்டச்சு செய்யப்பட்டது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட 2வது நபர் சீட்டுத்தொகையை தள்ளி எடுத்துக்கசொன்னதாக கூறியுள்ளதை போலீசார் விசாரணையில் நான் சொன்னேனா என்றால் ஆம் சொல்லியிருக்கிறேன். புகாரிலும் சொல்லியிருக்கிறேன்.

2) நான் பணத்தை திரும்ப கேட்டதாக முதல் விசாரணை சாட்சியதில் சொல்லியுள்ளதை பொருத்து மேற்படி சங்கதியை எனது போலீசார் விசாரணையிலும், புகாரிலும் கூறியுள்ளேனா என்றால் ஆம் கூறியுள்ளேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் நான் என் பெயரில் சீட்டுப்போட்டேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை . என் மனைவி வேம்பு பெயரில்தான் சீட்டு உள்ளது.

3) ஏலச்சீட்டு என்பது ஒவ்வொரு மாதமும் தவனைத்தொகை மாறும் என்று சொன்னால் சரிதான் . அதன் கசறு என்ற தொகையை பிரித்து கொடுத்து விடுவார்கள் என்று சொன்னால் சரிதான். மாதத்தவனை மாதா மாதம் குறைந்து கொண்டுதான் வரும் என்று சொன்னால் சரிதான்.

4) சீட்டு தொடங்கப்பட்டதாக சொல்லப்பட்ட தேதி 05.06.2011 என்று சொன்னால் சரிதான். ஏலத்தில் நான் கலந்துகொள்ளவில்லை. எனது மனைவிதான் கலந்து கொண்டார். 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபரை 05.06.2011 ஆம் தேதி நான் நேரடியாக பார்த்துள்ளேன். எந்த இடத்தில் என்றால் மன்னார்குடி எம்.ஜி.ஆர் நகரில் உள்ள அவரது கடையில் வைத்து பார்த்தேன். மேற்படி சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன்.

5) நான் தாக்கல் செய்த **அசாஆ.2 ல்** இருவேறு தேதிகளில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் காவல்நிலையத்தில் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் இருந்து கையொப்பம் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி சங்கதியையும் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னால் சொல்லப்பட்ட வரவு செலவு விவரங்கள் அனைத்தும் எனது தங்கை சுசீலாவுக்குதான் தெரியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி சங்கதியையும் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6) நான் இந்த வழக்கு சம்பந்தமாக எங்கெங்கெல்லாம் புகார் கொடுத்தேன் என்றால் கலக்டரிடம் கொடுத்தோம், SP யிடம் கொடுத்தோம், அவர் கையெழுத்து போட்டு மன்னார்குடி நகர காவல்நிலையத்திற்கு அனுப்பினார் அதற்கு பிறகுதான் விசாரணை செய்தார்கள். பாஞ்சான் செல்வராஜிடம் வழக்கு சம்பந்தமாக பஞ்சாயத்து எதுவும் பேசப்பட்டதா? என்றால் எனக்கு அது சம்பந்தமாக எதுவும் தெரியாது. எனக்கு அசலும், வட்டியும் சேர்த்து வேண்டும் என்று எனது புகாரில் கூறியுள்ளேனா என்றால் ஆம் கூறியுள்ளேன்.

7) என்னால் செலுத்தப்பட்டதாக சொல்லக்கூடிய சீட்டுப்பணம் எவ்வளவு , வட்டி எவ்வளவு என்று நான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். என்று நான் கட்டிய அசலும், அதற்கான வட்டியும் சேர்த்து செலுத்தச்சொல்லி மன்னார்குடி காவல்நிலையத்தில் வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டதா? என்றால் ஆம் இன்ஸ்பெக்டர் சரவணன் சார் பேசி மூன்று தவனையாக மேற்படி தொகையை செலுத்துவதற்கு பேசிக்கொடுத்தார். அதன் அடிப்படையில் இந்த வழக்கிற்கு ஏற்றாற்போல் இந்த ஆவணங்கள் ஜோடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேலும், இதை தவிர வழக்கிற்கு ஏற்றாற்போல் பின்யோசனையின்பேரில் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு , தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மூன்றுதவனையாக பணம் தருவதாக வழக்கிற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8) மேற்படி ஆய்வாளர் சரவணன் எங்கள் ஊர்க்காரர்தான் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளின்படி ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எனக்கு எந்தவகையிலும் பணம் தர தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல்எந்தவித சீட்டுப்பணமும் கட்டவில்லை என்பதால் எனக்கு அவர்கள் தரதேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர்

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சீட்டு நடத்தவே இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.